IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 39/2024

dated : 04.11.2025

D.W.2

Name மாரிப்பாண்டி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மேலக்கடையநல்லூரில் வசித்து வருகிறேன். வாதிகள் வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். நான் கிரையம் பெற்ற இடம் வாசுதேவநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகும். வழக்குரை சொத்து கடையநல்லூரில் உள்ளது. ஆவண எழுத்தர் கூறியதால் வாசுதேவநல்லூர் சென்று பதிவு செய்தோம். கிரைய ஆவணத்தில் 1வது இலக்கச் சொத்தின் புல எண் எல்கை விவரங்கள் என்னால் கூற முடியுமா என்றால் முடியாது. கிரைய ஆவணம் எழுதும் முன்பாகவே பி.சா.ஆ.2 ஆவணம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. பி.சா.ஆ.3 எனது கிரைய ஆவணம் அதில் பி.சா.ஆ.2 ன் விவரங்கள் கூறப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் செல்லம் ஆசாரி இறந்தபின்னர் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேசி முடித்துக் கொண்டதன்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு கிடைத்த சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாக அதில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்தில் பி.சா.ஆ.3 ல் குறிப்பிடும் வாசுதேவநல்லூர்

1வது இலக்கச் சொத்தை குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.3 ஆவணத்தில் கடையநல்லூரில் உள்ள கிழமேல் 37 1/2 அடி கண்ட சொத்து கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ல் எந்த பிரதிவாதிக்கு எவ்வளவு கிழமேல் அடி அகலமுடைய சொத்து கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. செல்லம் ஆசாரி எப்போது இறந்துபோனார் என்று எனக்கு தெரியாது. வழக்கிற்கு முன்பு வாதிகள் எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ-3 ல் சாட்சி கையெழுத்திட்ட நபர்கள் சமுத்திரம், நாராயணசாமி என்றால் சரிதான். அவர்களை பார்த்துள்ளேன். அவர்களை 1, 2 பிரதிவாதிகள்தான் அழைத்து வந்தார்கள். பி.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்தை ரூ.12,00,000/-க்கு கிரையம் பெற்றேன். பாதைக்காக சிவசுப்பிரமணியன் ரூ.2,50,000/- தனியாக பெற்றுக் கொண்டார். பி.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட பேச்சுவார்த்தையில் யார் யார் கலந்துகொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு கடன் இருந்ததால் எனக்கு கிரையம் கொடுத்தார். பி.சா.ஆ.3 ஆவணம் எழுதுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்பாக என் மீது கடையநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கு பின்னர்தான் என் பெயரில் வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த கிரையம் பெற்ற சொத்தில் கண்ணன் என்பவர் குடியிருக்கிறார் அவருக்கு நான்தான் வாடகைக்கு விட்டேன். அதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை. பி.சா.ஆ.2 ஆவணம் உண்மையானது அல்ல என்றும்

வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.3 ன் அடிப்படையில் எனக்கு சுவாதீனம் அனுபவம் ஏதும் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவரது பெற்றோர் சொத்துக்களில் பங்கு உண்டு என்றால் சரிதான். ஆனால் அதற்கு ஏற்கனவே ஈடாக சீர் சீராட்டுக்கள் செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் வீண் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றும் வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணம் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.04 17:45:08 +0530